**இலங்கை ஹதபிம அதிகாரசபை**

**------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.1 அபிப்பிராயம்

----------------------

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதியுயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை ஹதபிம அதிகார சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கேடுகளைப் பேணியுள்ளது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறான விடயங்களினால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை ஹதபிம அதிகார சபையின் நிலைவரம், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டின் விற்பனைசாலைக் கணக்குகளுக்குரிய எண்ணிக்கைகள் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

i. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பள்ளேகலை பண்ணையில் கால்நடை உணவு இருப்பு ரூபா 1,894,788 கூடுதலாக மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மிகையும் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

ii. கொத்மலை நாற்று மேடையில் எஞ்சிய முட்டைகள் மற்றும் கன்று இருப்புக்கள் என்பன விற்பனை விலையிலும், கால்நடை உணவு இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த புண்ணாக்கு கூடிய விலையிலும் கணிப்பிட்ட காரணத்தால் முறையே ரூபா 374,277 மற்றும் ரூபா 85,750 உமாக இருப்பின் பெறுமதி ரூபா 460,027 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக பண்ணைக் கணக்கில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பற்றாக்குறை அப்பெறுமானத்தால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

iii. நன்கொடையாக கிடைத்த ரூபா 3,939,000 ஆன வாகனங்கள் மற்றும் தளபாடங்களுக்குரிய பெறுமானத் தேய்வுப் பெறுமதியான ரூபா 958,675 நிலையான சொத்துக் கணக்கில் இருமுறை செலவு வைத்த காரணத்தால் ஆண்டின் மிகையும் நிலையான சொத்துக்களும் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

iv. மீளாய்வாண்டினுள் பாவனைக்கு எடுக்கப்பட்ட ரூபா 4,999,350 பெறுமதியான இருப்புக்கள் செலவினத் தலைப்பிற்கு வரவு வைக்காமல் 4 நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்ட காரணத்தால் ஆண்டிற்கான மிகை அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

v. மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்யும் பொருட்டு கிடைக்கப்பெற்ற ரூபா 1,215,853 நிதியை ஐந்தொகையில் மூலதனப் பெறுவனவுகளாக கணக்கீடு செய்யாது மூலதனக் நன்கொடையாக வருமானச் செலவுக் கணக்கில் காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் அதிகரித்தும் மூலதனக் கணக்கு அப்பெறுமானத்தால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. மேலும் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்யும் பொருட்டு திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 19,402,428 தொகையான திரண்ட மானியத்தை ஐந்தொகையில் நிதியத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1983 ஆம் ஆண்டில் கம்பளை வீடமைப்பு கடன் திட்டத்தின் கீழ் காணப்பட்ட கடன் தொகையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 13,501 தொகையான 02 மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையிலிருந்து விலகிச் சென்ற 03 ஊழியர்களிடமிருந்து 05 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,150 ஆன விழா முற்பண மீதியொன்றும் அதிகாரசபையின் சேவையிலிருந்து விலகிச் சென்ற 04 ஊழியர்களிடமிருந்து 2 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 4,300 தொகையான விசேட முற்பண மீதியொன்றும் தொடர்ந்தும் தீர்க்கப்படாது காணப்பட்டது.

(இ) 1989 ஆம் ஆண்டில் உலக உணவு அமைப்பின் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 15 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், 1996 ஆம் ஆண்டின் பின்னர் செயற்திட்டம் செயற்படுத்தப்படாமையால் அவ் ஊழியர்கள் நீக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்காக அதிகாரசபையால் வழங்கப்பட்ட இடர் கடன்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 217,903 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது புத்தகங்களிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) விடுவிப்பு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு 1996 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து நீக்கப்பட்ட 03 உத்தியோகத்தர்களுக்கு, கூடுதலாகக் செலுத்தப்பட்ட ரூபா 97,950 விடுவிப்பு படியில் இருந்து மீளாய்வாண்டில் எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) வருடக்கணக்காக முன்கொண்டுவரப்படும் ரூபா 27,862 தொகையான வாழைக் கன்று நட்டம் மற்றும் பள்ளேகலை திறந்தவெளி சிறைச்சாலையிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 54,515 தொகையை மீளாய்வாண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

#### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டிலிருந்து ரூபா 11,769,650 மிகையாக இருந்ததுடன், இதற்கெதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,388,756 ஆனமையால் மீளாய்வாண்டின் மிகையில் ரூபா 14,158,406 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. 2010 ஆம் ஆண்டின் மூலதன மற்றும் விசேட செயற்திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 69,219,743 தொகையை வருமானமாக கணக்கீடு செய்தமையும் அங்கு ரூபா 13,634,011 தொகை எஞ்சியிருந்தமையும் இம்மிகை ஏற்படுவதற்கு பிரதான காரணமாக அமைந்தது. அவ்வாறே இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியின் கீழ் காட்டப்படும் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரையிலும் ஏனைய வழுக்கள் காரணமாகவும் இம்மிகையின் சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியாதுள்ளது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) வெளிக்களத்திற்கு நடுகைப் பொருட்களை வழங்கும் போது மெய்மையாய்வு அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு விவசாயிகளின் எண்ணிக்கை மற்றும் காணியின் அளவு, என்பவற்றைக் கருத்திற்கொண்டு நடுகைப்பொருட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக யட்டவத்த பிரதேச செயலகப் பிரிவினுள் காணியின் அளவிற்கு ஒப்பாக விதைகள் அதிகூடிய அளவில் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்ட நடுகைப்பொருட்களை முறையாக பகிர்ந்தளிக்கப்பட்டதா என்பதுவும் எஞ்சிய நடுகைப்பொருட்களை மீளக் கொண்டு வந்து கையளிக்கப்பட்டதா என்பதுவும் தொடர்பாக தலைமை அலுவலகத்தினூடாக முறையான கண்காணிப்பொன்றை மேற்கொள்ளாமை அவதானிக்கப்பட்டதுடன், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது யட்டவத்த பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் பகிர்ந்தளிக்காத பச்சை மிளகாய் பாகற்காய், புசிடட்டா அவரை வகையிலான 5.8 கிலோகிராம் விதைகள் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் பள்ளேகல விற்பனை நிலையம், அதிகாரசபையின் நலன்புரிச் சங்கத்தினூடாக 02 மாத காலமான குறுகிய காலத்தில் நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும், அதன்பிறகு அதன் விற்பனை நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்ததுடன், ஆண்டின் போது வேறொரு தரப்பினருக்கு விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் அல்லது விற்பனை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2003 ஆம் 2005 ஆம் ஆண்டுகளில் கமநல அமைச்சிடமிருந்து கிடைத்த ரூபா 2,200,000 பெறுமதியான ஜீப் வண்டியொன்றையும் பஜரோ வண்டியொன்றையும் முறையாக பொறுப்பேற்றிருக்கவில்லை.

### 2.2.2 பயனற்ற செலவினம்

கொத்மலை பண்ணையில் விவசாயிகள் பயிற்சி நடவடிக்கைகளுக்காக நிர்மாணிக்கப்படவிருந்த கட்டிடத்தின் ஆரம்ப நிர்மாண வேலைகள் தொடர்பாக மதிப்பிடப்பட்ட தொகையில் 20% ஆகிய ரூபா 459,914 தொகை 2004 திசெம்பரில் செலவிடப்பட்டிருந்த போதிலும், தேவையான நிதி ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் 2011 ஜனவரி வரையிலும் அந்நிர்மாணவேலை முடிவுறுத்தப்படாதிருந்தது.

### 2.2.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ரூபா 75,000 கிரயத்திலான உழவு இயந்திரமொன்றும் ரூபா 82,500 கிரயத்திலான மோட்டார் சைக்கிளொன்றும் 2010 ஆம் ஆண்டின் போது ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் இல்லாதிருந்ததுடன், அவ்வாகனங்களை திருத்தி ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது ஏலவிற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்காமல் 02 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**2.2.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

------------------------------------------

(அ) 2010 ஆம் ஆண்டில் மண் பாதுகாப்பு செயற்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக யட்டவத்த பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் எதிபொல மேற்கு கிராமசேவை பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்ட வெவ்வேறு வகைகளுக்குரிய விதைகளில் ரூபா 35,904 பெறுமதியான 13 கிலோ 665 கிராம் விதைகள் 2010 நவம்பர் 25 ஆம் திகதி வரையில் விவசாயிகளுக்கிடையே பகிர்ந்தளிக்காமையால் அவை காலாவதியாகியிருந்ததுடன் இப்பிரிவிலேயே 2010 நவம்பர் 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது விவசாயிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டதாக கையொப்ப பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 8,979 பெறுமதியான விதைகள் அவ்வாறு பகிர்ந்தளிக்கப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2010 செப்தெம்பர் மாதத்தினுள் கன்றுகள் விற்பனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 07 வகைகளுக்குரிய 2800 கன்றுகளின் பற்றாக்குறை காணப்பட்டதுடன், ஒரு வகைக்குரிய 108 கன்றுகள் மிகையாகவும் காணப்பட்டன.

**2.2.5 செயலாற்றல்**

------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) விசேட செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் விவசாய அமைச்சிடமிருந்து அதிகாரசபைக்கு ரூபா 37,117,376 தொகை கிடைக்கப்பெற்றிருந்ததுடன், செயற்திட்டத்திற்குத் தேவையான உள்நாட்டு விதைகள் மற்றும் நடுகைப்பொருட்களை அதிகாரசபையின் தேவைக்கேற்ற வகையில் கொள்வனவு செய்ய முடியாதிருந்தமை, அதிக வறட்சி காரணமாக செயற்திட்டத்தை அமுல்படுத்த முடியாமையும் சில செயற்திட்டங்கள் 2010 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பித்தமை போன்ற காரணத்தின் அடிப்படையில் ஆண்டின் போது ரூபா 31,274,833 பெறுமதியான 10 செயற்திட்டங்களே செயற்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,842,543 தொகை மீள அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. செயற்படுத்தப்பட்ட செயற்திட்டத்திற்காக அதிகளவு தாமதம் காணப்பட்டதுடன், அது 43 நாட்கள் முதல் 230 இற்கு இடைப்பட்ட வீச்சில் இருந்தது.

(ஆ) நீர்த்தாங்கி செயற்திட்டம் 2011 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், பொருட் கொள்வனவு தலைமை அலுவலகத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வெளிக்களத்திற்கு பகிர்ந்தளித்தல் அதிகாரசபை மற்றும் தனியார் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட லொறி மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பொருளாதார ரீதியில் மிகவும் இலாபகரமான முறைமையைப் பின்பற்றாமல் செயற்திட்டத்தை செயற்படுத்தியமையால் அதிகளவிலான கிரயமும் காலதாமதமும் இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், 2011 யூன் 30 ஆம் திகதி வரையில் பகிர்ந்தளிக்கப்படாது 253 சீமேந்து மூடைகள் களஞ்சியத்தில் காணப்பட்டன.

### 2.2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகளுக்கிடையே கருத்திற்கொள்ளக் கூடியளவு விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வுப் பரிசோதனையின் போது புலனாகிய முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் எனது அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களின்பால் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கு வைப்பு
(ஆ) மண் பாதுகாப்பு செயற்திட்டமும் விசேட செயற்திட்டமும்
(இ) நடுகைப்பொருள் பகிர்ந்தளிப்பு
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு